


விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விக்கிரவாண்டி தொகுதி கோலியனூர் மேற்கு ஒன்றியம் இந்திரா நகர் , ஸ்டாலின் நகர் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் – ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி மற்றும் உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து வாக்காளர்களிடம் தி.மு.க. அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு களைச் சேகரித்தனர் . மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ் , வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்தி ராஜன், குமார்'ஸ் கல்வி நிறுவனர் கோத. குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி,பி.தெய்வ சிகாமணி, தே.முருகவேல் உள்ளிட்ட ஒன்றிய, நகர , பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி தோழர்கள் உடனிருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியத்தில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் பொதுமக்களிடம் கழக அரசின் சாதனைகளை விளக்கும் துண்டுப் பிரசுரங்களை வழங்கி வாக்கு சேகரித்தார். உடன் திருமதி தமிழரசிரவிக்குமார் எம். எல்.ஏ.,மாவட்ட துணைச்செயலாளர் த.சேங்கைமாறன், மேற்கு ஒன்றியச் செயலாளர் வேம்பிரவி உட்பட நிர்வாகிகள் சென்றார்கள்.

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல் :

# மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினர் வாக்குச் சேகரிப்பு!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் தலைமை!

மயிலாடுதுறை, ஜூலை 8-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கினங்க விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளரும்,பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் ஆசூர் ஊராட்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் திரு.கௌதமசிகாமணி ஆகியோர் முன்னிலையில்

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம் புகார் சட்ட மன்ற உறுப்பி னர் நிவேதா எம். முருகன். தலைமையில் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த கழகத்தினர் மற்றும் விக்கிரவாண்டி மத்திய ஒன்றிய கழகத்தினர் ஆசூர் ஊராட்சி உள்ள கழக நிர்வாகிகள் பாகம் எண் 200, 201, 202 ஆகியவற்றில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர்.விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் தேர்தல் பணியில் மயிலாடுதுறை மாவட்ட கழகத்தைச் சேர்ந்த தலைமைச் செயற்குழுகழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப் பினர் எம்.பன்னீர் செல்வம்,மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி. மாவட் டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞான வேலன், எஸ். செல்வமணி, கண்ணகி பன்னீர், மாவட்டக் கழக பொரு ளாளர் மகா. அலெக்சாண்டர்,விக்கிரவாண்டி மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஜெயபால், என்.இளைய பெருமாள், மூவலூர் எம். மூர்த்தி, செல்லசேதுரவிக்குமார், ஞான.இமையநாதன்

பி.முருகமணி, மலர் விழி திருமாவளவன். மங்கை எம்.சங்கர், பி.எம். அன்பழகன், எம். அப்துல் மாலிக், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், பஞ் சுகுமார், அமிர்த. விஜயகு மார், கு.வைத்திய நாதன், ஏ.ஆர்.ராஜா, நகரக் கழகச் செயலாளர்கள் குண்ட மணி (எ) என்.செல்வராஜ். ம.சுப்பராயன், தொழில் நுட்ப தகவல் அணி தஞ்சை மண்டல பொறுப் பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர் கள்ஹர்சத் நத்தம் ஏ.வின்செண்ட், ஜெ.சுபிலன், பேரூர்

கழகச் செயலாளர்கள், எஸ். கே.முத்துராஜா, எம். சம்சு தீன், என்.அண்ணா துரை, ஒன்றிய குழு தலைவர்கள் மகேந்திரன், ஜெய பிரகாஷ், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.கே. சரவணன், மலைக்கோயில் பிரபாகரன், செல்லமணி மணல்மேடு பேரூராட்சி தலைவர் கண்மணி அறிவழகன், மயிலாடுதுறை மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே. மருது, வி.எஸ்.என்.செந்தில், இரா.முருகப்பா, ராஜ்குமார், தீபாசத்தி யேந்திரன், சாந்தி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் க.சுரேஷ், ஆசூர் கிளை கழக செயலாளர் வேணுகோபால், , ஆசூர் கிளைக் கழக நிர்வாகிகள் கண்ணதாசன் சக்திவேல், முத்துலட்சுமி, ஆறுமுகம், ராதாகிருஷ்ணன். பெருமாள், முருகவேல், தண்டபாணி, சி.என்.ஏழுமலை, குமார், முருகன், வீரராகவன், பழனி, அய்யனார், ஆறுமுகம், கலையரசி, கண்ணதாசன், சுகுமார், நடராஜ், சூர்யாராஜ் , அசூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முத்துகுமரன் மற்றும்மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த கழகத்தினர் மற்றும் ஆசூர் கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### ஒன்றிய அரசின் புதிய குற்றவியல் நடைமுறை சட்டத்தை எதிர்த்து

# திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## வழக்கறிஞர் விநாயகமூர்த்தி தலைமை!

திருவாரூர்,ஜூலை8-

திருவாரூரில் திமுக மாவட்ட வழக்கறிஞர் அணியின் சார்பில் ஒன்றிய பிஜேபி அரசின் புதிய குற்றவியல் நடைமுறை சட்டங்களை எதிர்த்து மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் விநாயகமூர்த்தி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது . இதில் அனைத்து வழக்கறிஞர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு மத்திய அரசின் சட்டத்திருத்தத்திற்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.

ஒன்றிய பிஜேபி அரசு தற்போது நடைமுறையில் உள்ள குற்றவியல் சட்டங்களை திருத்தி புது வடிவமாக சட்ட திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. இதற்கு நாடு முழுவதும் வழக்கறிஞர்கள் கடும் கண்டன குரல் எழுப்பி வருகின்றனர் . திமுக சட்டத்துறை சார்பில் மாவட்டம் தோறும் மாவட்ட தலைநகரில் உள்ள நீதிமன்றங்களுக்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழி காட்டுதல்களின்படியும், கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ, மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர்களின் ஆலோசனைகளின்படியும் திருவாரூரில் நீதிமன்ற வாயிலில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் விநாயகமூர்த்தி அவர்களின் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் வழக்கறிஞர் பஞ்சமூர்த்தி முன்னிலை வகித்தார். இதில் திருத்துறைப்பூண்டி மன்னார்குடி நன்னிலம் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான வழக்கறிஞர்கள் பங்கெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் வழக்கறிஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர்கள் மகாலட்சுமி ,வீரக்குமார், கோபி கண்ணன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ராஜ் என்கிற கருணாநிதி, மன்னார்குடி வழக்கறிஞர் சங்க தலைவர் வழக்கறிஞர் ஜே. நாகையன் , நீதிமன்ற அமைப்பாளர் இளஞ்சேரன், விவேகானந்தன், திருவாரூர் நீதிமன்ற தலைவர் ராஜேந்திரன், வி.சி.க. வழக்கறிஞர் அணி மாவட்ட அணி செயலாளர் செல்வகுமார், சி.பி.ஐ. வழக்கறிஞர் தாமோதரன், அ.ம.மு.க. வழக்கறிஞர் லெனின், விஜயகுமார், த.வெ.க. மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் மதிவாணன் உள்ளிட்ட ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு ஒன்றிய அரசின் புதிய குற்றவியல் நடைமுறை சட்டங்களை எதிர்த்து கண்டன முழக்கமிட்டனர்.



தூத்துக்குடி மாவட்டம புதுக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் (06.07.2024) இந்தியா அளவில் முதல் இடத்தை பிடித்த மூக்குப்பீறி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட சான்றிதழை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ. லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.இரா.ஐஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.பொற்செல்வன் ஆகியோர் உள்ளனர்.

### நீலகிரி மாவட்டத்தில்– சுற்றுலாத் துறையின் சார்பில்

# சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு செய்யப்பட்டு வரும் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டார்!

நீலகிரி, ஜூலை 8-

நீலகிரி மாவட்டத்தில், சுற்றுலாத்துறையின் சார்பில், சுற்றுலாத்தலங்களை மேம்பாடு செய்யப்பட்டு வரும் பணிகள் மற்றும் மேம்பாடு செய்யப்பட வேண்டிய பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (06.07.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக்கு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முதலாவதாக, சுற்றுலாத்துறை அமைச்சர், உதகை படகு இல்லத்தில் நடைபெற்று வரும் ஜிப் லைன், மாபெரும் ஊஞ்சல், ரோடல் கோஸ்டர், பங்கீ ஜம்பிங், தொங்கு பாலம் உட்பட பல்வேறு அம்சங்களுக்கான கட்டுமான பணிகளையும், ஹோட்டல் தமிழ்நாடு இளைஞர் விடுதியில் உள்ள மேம்பாடு பணிகள் மற்றும் அடிப்படை வசதிகளையும் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மந்தாடா பகுதியில், தொட்டபெட்டா முதல் மந்தாடா வரை ரோப் கார் அமைக்கவும், மைனலா சாலை அல்லான்ஜி பகுதியில் காட்சி முனை அமைக்கவும் சாத்தியக்கூறுகள் உள்ளனவா எனவும், தொட்டபெட்டா சுற்றுலாத் தலத்தில் அங்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் இவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத்துறை உட்பட அனைத்துத்துறைகளின் சார்பில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை தொடர்ந்து சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள்.

மேலும் சுற்றுலாத்துறையின் சார்பில் கடந்தாண்டு தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு உள்நாடு, வெளிநாடு என ரூ.28 கோடி சுற்றுலா பயணிகளும், 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.32 கோடி சுற்றுலா பயணிகளும் வருகை புரிந்துள்ளனர். அதன்படி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சுற்றுலா தலங்களையும் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் மூலம் சுமார் ரூ.40 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித்திட்டப்பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில், சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த இன்றைய தினம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் அவர்களுடன் இணைந்து, உதகை படகு இல்லம், ஹோட்டல் தமிழ்நாடு இளைஞர் விடுதி, மைனலா மற்றும் தொட்டபெட்டா ஆகிய பகுதிகளில் நேரிடையாக சென்று வளர்ச்சி பணிகளை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், உதகைக்கு சுற்றுலா வரும் சுற்றுலா பயணிகள் உதகை படகு இல்லம், அரசு தாவரவியல் பூங்கா, தொட்டபெட்டா மற்றும் பைக்காரா ஆகிய சுற்றுலா தலங்களுக்கு வந்து செல்கிறார்கள். நீலகிரி மாவட்டத்திலுள்ள இதர சுற்றுலா தலங்களையும் மேம்படுத்தி, நவீனபடுத்தும் பணிகள் குறித்தும் இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்தஆய்வின் போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மண்டல மேலாளர் குணேஸ்வரன், உதகை படகு இல்ல மேலாளர் உதயகுமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் திருமதி.ஜெகதீஸ்வரி, உதவி செயற்பொறியாளர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசு புதிய மூன்று குற்றவியல் சட்டங்களை

# திருத்தத்துடன் செயல்படுத்தினால் ஏற்றுக் கொள்வோம்!

## திருச்சி சிவா எம்.பி. பேட்டி!



சிவகங்கை. ஜூலை 8.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முன்னாள் முதல்வர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாள் கூட்டத்தில் பங்கேற்க வந்த கழக அமைப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி.செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஒன்றிய அரசு மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை அமல்படுத்தி உள்ளது. இந்த சட்டங்களின் மூலம் காவல்துறைக்கு அதிகாரம் கூடுதலாக தரப்பட்டுள்ளது. சட்டங்களின் பெயர்கள் முன்பு ஆங்கிலத்தில் இருந்தது. தற்போது சமஸ்கிருதத்தில் மாற்றப்பட் டுள்ளது. சமஸ்கிருத சாயலில் இருக்கும் இந்த பெயர்கள் காவல் துறை நீதித்துறை மட்டுமல்லாது எங்களுக்கே என்னவென்று புரியவில்லை.

இந்த சட்டங்களை பெரும்பாலானவர்களின் கோரிக்கையை ஏற்று திருத்தங்களுடன் நிறைவேற்றினால் எங்களுக்கு ஏதும் ஆட்சேபனை இல்லை. சட்டங்கள் என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். கள்ளச்சாராயம் மரணத்தினால் முதல்வர் அவர்கள் மிகுந்த மன வேதனையுடன் வருத்தத்துடன் உள்ளார். கூட்டணி கட்சிகளின் கோரிக்கைக்கு ஏற்ப இதில் யார் தவறு செய்தாலும் கடுமையான தண்டனை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு முதல்வர் அவர்கள் உத்தரவிட் டுள்ளார் .

இவ்வாறு திருச்சி சிவா எம். பி .கூறினார். பேட்டியின்போது பொதுக்குழு உறுப்பினர் பி. டி. ஆர் . முத்து உடன் இருந்தார்.

### இன்று (8ம் தேதி) திருப்பத்தூரில்

# முன்னாள் எம்.எல்.ஏ. ராம.சிவராமன் 17வது ஆண்டு நினைவு நாள்!

## அமைச்சர் பெரிய கருப்பன் தலைமையில் தி.மு.க வினர் மரியாதை!

சிவகங்கை, ஜூலை 8-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் செயற்குழு உறுப்பினர் ராம.சிவராமன்.இவர் கடந்த 2007ம் ஆண்டு ஜூலை 8ம்தேதி மறைவெய்தினார். இவரது 17வது ஆண்டு நினைவுநாள் இன்று (8ம் தேதி) காலை 8.00மணி. அளவில் திருப்பத்தூரில் அனுசரிக்கப்படுகிறது. திருப்பத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் ராம.சிவராமனின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செய லாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் தலைமையில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கூட்டணி கட்சியினர் மலர் அஞ்சலி செலுத்தி செலுத்துகிறார்கள்.




விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைதேர்தலில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து கப்பியாம் பூலியூர் ஊராட்சி பூத் எண்218,219 ஆகிய பகுதிகளில் அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி பொதுமக்களிடம் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் விக்கிரவாண்டி கிழக்கு ஜெய.ரவிதுரை, ஒன்றிய குழு உறுப்பினர் சாந்தி, பி.மோகன், கே.வி.ராமராவ், ஆர்.பெருமாள், பி.விஜயகுமார், கேசவப்பெருமாள், லட்சுமி நாராயணன், பிரபாகரன், விஷ்ணு, முரளி, துரைராஜ், திருவேங்கடம், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி அமைப்பாளர் பி.ரகுபதி, விசிக ஆர். ராஜேஷ், எம்.மணி, சுப்பிரமணி மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.